# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

O.S.No.80/2023

**CNR.No.TNCB19000**

Date:26.03.2025 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ஜனார்த்தனன் | **வயது** | 34 |
| த/பெ | கோபாலகிருஷ்ணன் | **வட்டம்** | |
| விலாசம் | மேட்டுப்பாளையம் | **மாவட்டம்** | |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 26th March 2025

**வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் மேட்டுப்பாளையம் சிவன்புரம் காலனியில் குடியிருக்கிறேன். சிவன்புரம் காலனி என்பது மேட்டுப்பாளையம் கோவை மாவட்டத்தில் உள்ளது. நான் ஐ. டி நிறுவனத்தில் வேலை செய்கிறேன். நான் முறையாக வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். பைனான்ஸ் என்னுடைய தொழில் இல்லை. பைனான்ஸ் கொடுப்பதாக இருந்தால் முறையாக உரிமம் பெற்றுதான் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். நான் என். கே. கோபாலுக்கு 10.05.2020 அன்று கொடுத்தேன். ரூ. 7,50,000/- கொடுத்தேன். என்.கே.கோபால் எனக்கு உறவினர்.

என். கே. கோபால் எங்கே குடியிருக்கிறார் என்றால் 624/3, ஜவஹர்லால் வீதி , புஞ்சை புளியம்பட்டியில் குடியிருக்கிறார். புஞ்சை புளியம்பட்டி ஈரோடு மாவட்டத்தை சேர்ந்ததாகும். என்.கே.கோபால் விவசாயம், பெட்ரோல் பங்க், வே பிரிட்ஜ் மற்றும் ரியல் எஸ்டேட் ஆகிய தொழில் செய்து வந்தார். இதுபோக அவருக்கு திருமண மண்டபமும் இருந்தது என்றால் சரிதான். இந்த வழக்கு மரகதமணி, சதீஸ், கௌரி மற்றும் பிரதீப் ஆகியோர்கள் மீது தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி மரகதமணி என்பவர் என்.கே.கோபாலின் சட்டப்படியான மனைவி அல்ல என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள் என்.கே.கோபாலின் முதல் மனைவிக்கு பிறந்த குழந்தைகள் என்றால்

சரிதான்.

முதல் பிரதிவாதி என்.கே.கோபாலின் முதல் மனைவி அல்ல என்றும் அவர் சட்டப்படியான வாரிசு அல்ல என்றும் 2, 3 பிரதிவாதிகள் முதல் மனைவிக்கு பிறந்த குழந்தைகள் என்பதை நான் தாக்கல் செய்த வழக்கின் அறிவிப்பிலோ, பிராதிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். என்.கே.கோபால் எப்போது என்னிடம் பணம் கேட்டார் என்றால் 2020 ம் ஆண்டு மே மாதம் முதல் வாரத்தில் கேட்டார். எப்படி பணம் தயார் செய்தேன் என்றால் ஏற்கனவே திருமணத்திற்காக பணம் சேர்த்து வைத்தேன் என்னுடைய சேமிப்பு பணமும் இருந்தது.

அந்த பணம் 500 ரூபாய் கட்டுகளாக வைத்திருந்தேன். ரூ . 2 லட்சம் ரூபாய்க்கு மேல் பண பரிவர்த்தனை செய்யக்கூடாது என்பது சட்டம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சொல்லும் தேதியில் எத்தனை மணிக்கு எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால் என்னுடைய வீட்டில் காலை 10 அல்லது 10.30 மணிக்கு கொடுத்தேன். நான் பணம் கொடுக்கும்போது என்னுடைய அப்பா இருந்தார் மற்றும் என்னுடைய உறவினர் எனது அப்பாவின் நண்பர் இருந்தார். இவர்கள் எதற்காக எனது வீட்டிற்கு வந்தார்கள் என்றால் எனது சொந்தக்காரர் கார்த்திகேயன் எனது திருமணத்திற்காக பேசுவதற்கு வந்தார். மற்றொருவர் தேவேந்திரன் என்பவர் எனது அப்பாவிடம் பேசுவதற்காக வந்தார்.

எனது அப்பா பெயர் கோபாலகிருஷ்ணன். எனது அப்பாவின் நண்பர் பெயர் தேவேந்திரன். தேவேந்திரன் மேட்டுப்பாளையத்திலுள்ள கே. கே.நகரில் குடியிருக்கிறார். கே. கே. நகருக்கும் சிவன்புரம் காலனிக்கும் சுமார் 1 . கி. மீட்டர் தூரம் இருக்கும். கார்த்திகேயன் அன்னூரில் குடியிருக்கிறார். அன்னூருக்கும் மேட்டுப்பாளையத்திற்கும் சுமார் 20 கி. மீ இருக்கும். என்.கே.கோபாலுக்கு பணம் கொடுத்து அவரை அனுப்பிவிட்டேன். வேறு எதுவும் செய்யவில்லை. கடனுறுதி சீட்டில் என்.கே.கோபால் கையெழுத்து செய்யவில்லையா என்றால் கையெழுத்து செய்தார். புரோ நோட்டில் எத்தனை கையெழுத்து செய்தார் என்றால் இரண்டு கையெழுத்து செய்தார்.

யார் யார் புரோ நோட்டில் கையெழுத்து செய்தார் என்றால் முதலில் என்.கே.கோபால் கையெழுத்து செய்தார். அதன் பிறகு என். டீ. தேவேந்திரன் கையெழுத்து செய்தார். அதன்பிறகு கார்த்திகேயன் கையெழுத்து செய்தார்.

கடைசியாக எனது அப்பா கையெழுத்து செய்தார். என்.கே.கோபால் ரேகை வைத்து கையெழுத்து செய்தார். 1ம் பிரதிவாதிக்கும் 2, 3 பிரதிவாதிகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு இன்றுவரை இருந்து வருகிறது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்.கே.கோபால் இறந்த பிறகு பூர்த்தி செய்யப்படாத வெற்று கடனுறுதி சீட்டு, பத்திரங்கள் ஆகியவற்றை 1ம் பிரதிவாதி எடுத்துச் சென்று விட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

இன்றுவரை அது சம்பந்தமாக எனக்கு தெரியாதா என்றால் தெரியாது. இந்த வழக்கில் 2, 3 பிரதிவாதிகள் எதிருரை தாக்கல் செய்ததை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். இந்த விபரங்கள் அனைத்தும் எதிருரையில் சொல்லியுள்ளது என்றும் ஆனால் இதுநாள்வரை எனக்கு தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வீட்டிலுள்ள பத்திரங்கள் கடனுறுதி சீட்டு ஆகியவற்றை எடுத்து சென்றது சம்பந்தமாக 2ம் பிரதிவாதி புளியம் பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த புகார் சி. எஸ். ஆர்.1/2022 என பதிவாகி உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

அந்த புகாருக்கு பின்னிட்டுதான் வழக்கறிவிப்பு அனுப்பியிருக்கிறேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் 10.05.2020 தேதி என்.கே.கோபாலுக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் ஊரடங்கு உத்தரவு இருந்தது என்றால் சரிதான். ஆனால் முழுமையான ஊரடங்கு கிடையாது. 17.05.2020 வரைக்கும் டாக்சி, ஆட்டோ, போன்ற வாகனங்கள் வெளியே வரக்கூடாதென அரசு அறிக்கை விட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி அவருடைய சொந்த வாகனத்தில் வந்தார். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் மத்திய அரசால் நான் சொல்லப்படும் சமயத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதிக்கும் 2, 3 பிரதிவாதிகளுக்குமிடையே பல வழக்குகள் நடைபெற்று கொண்டு இருக்கிறது என்றும் அதில் ஒரு வழக்கு கோபிசெட்டிபாளையம் 3-வது மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்றும் அந்த வழக்கில் பாகம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த வழக்கில் தாவா வழக்கு முடியும் வரை தாவா சொத்தை விற்கவோ வில்லங்கம் படுத்தக்கூடாதென தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது. அந்த உத்தரவுக்கு பின்னிட்டு தாவா சொத்தை பொறுத்து எந்த வில்லங்கமும் செய்யக்கூடாது என தினசரி நாளிதழில் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. வருமான வரி கணக்கில் ரூ. 7,50,000/- த்தை காட்டி உள்ளேனா என்றால் இல்லை. என்.கே.கோபாலுக்கு கொடுத்த பிறகு அவருக்கு கொடுத்ததை வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் இல்லை.

நான் சொல்வது போல் 10.05.2020 அன்று பொது மக்கள் யாரும் வெளியே வரமுடியாமல் ஊரடங்கு உத்தரவினால் வீட்டுக்குள்ளேயே இருந்தார்கள் என்றும் நான் சொன்னது போல் புளியம்பட்டி மற்றும் அன்னூரிலிருந்து வரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எடுத்து வைத்த கடனுறுதி சீட்டை என்னிடம் கொடுத்து அதை பூர்த்தி செய்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த அதே சமயத்தில் சத்தியமங்கலம் மற்றும் கோபிசெட்டிபாளையம் நீதிமன்றத்தில் கடனுறுதி சீட்டு வழக்கு பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

நான் சொன்னது போல கோபாலுக்கு பலவிதமான தொழில் இருந்து வருமானம் இருப்பதால் என்னிடம் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பொய் வழக்கு தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் என்.கே.கோபால் எனது உறவினர் என்று பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றும் அவர் யார் என்றே எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.